


கோலாலம்பூர், மார்ச் 20-

நாட்டின் சுதந்திரத்திற்கு முன்னதாகக் கட்டப்பட்ட தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் விரைவில் உடைக்கப்படும் என்ற ஒரு தகவல் தீயாகப் பரவி வருகிறது. இங்கு வேறொரு திட்டத்திற்கு மத்திய அரசாங்கமும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் (டிபிகேஎல்) ஒப்புதல் அளித்துள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த இடத்தில் புதிய திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இம்மாதப் பிற்பகுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கோலாலம்பூரின் மையப்பகுதியில் வீற்றிருக்கும்

# தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் உடைப்பு?

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

### கோலாலம்பூரின் மையப்பகுதியில்...

பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையில் அந்த நிகழ்ச்சி நடைபெறும் என்றும் சொல்லப்படுகிறது என்று மலேசியா நாவ் செய்திக்குறிப்பு கூறுகிறது.

ஜேக்கல் மாலுக்கு எதிர்ப்புறம் மிகவும் பரபரப்பான ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியில் இந்த ஆலயம் வீற்றிருக்கிறது. வானுயர வர்த்தகக் கட்டடங்களுக்கு மத்தியில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயம் இந்துக்களின் பிரபலமான வழிபாட்டுத் தலமாக விளங்கி வருகிறது.

இந்த ஆலயம் வீற்றிருக்கும் நிலம் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அரசாங்கம் விற்று விட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் தனியார் நிறுவனம் இப்பகுதியில் உள்ள ஒரு மிகப்பெரிய ஷோப்பிங் செண்டருக்குச் சொந்தமானதாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இந்த நிலம் சில ஆண்டுகளுக்கு முன்னரே கைமாற்றி விடப்பட்டதாக நம்பப்படுகிறது என்று மலேசியா நாவ் செய்தி தெரிவித்தது. இந்த இடத்திற்கு மாற்றாக வேறோர் இடம் வழங்கப்பட வேண்டும் என்ற ஆலய செயற்குழுவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்றும் நம்பப்படுகிறது. இவ்விவகாரம் குறித்து கருத்துரைப்பதற்கு ஆலய செயலவை உறுப்பினர்கள் மறுத்து விட்டனர்.

இதனிடையே லோயர்ஸ் ஃபோர் லிபர்ட்டி என்ற அமைப்பு பெட்டாலிங் ஜெயாவில் உள்ள தன்னுடைய அலுவலகத்தில் இன்று காலை 11.00 மணிக்கு ஆலய செயலவையுடன் இணைந்து பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தவிருப்பதாகவும் கூறப்படுகிறது.